விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 | பங்குனி 5 | றஜப் 6 | இதழ் 36
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 18-3-1986


## பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு கொலைப் பயமுறுத்தல்!

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியுடன் விளையாடும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டியின் முகாமையாளர் ஜனுப் ஷலீம் அஸ்கார்மியான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் இலங்கை அணியுடன் விளையாட விருப்பமில்லையென்றும், இந்தச்சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்யுமாறும் மகஜர் ஒன்றில் கையெழுத்திட்டு தம்மிடம் சமர்ப்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் வீரர்களுடன் கலந்துரையாடி, இலங்கை அணியுடன் தொடர்ந்து விளையாட முயற்சி செய்வேன் என்றும் அவர் கூறினார்.

இது துரதிர்ஷ்டவசமான சம்பவம் என்றும் இனிமேலும் இலங்கை கோஷ்டியுடன் விளையாட தாம் விரும்பவில்லையென்

(5ம் பக்கம் பார்க்க)

## ● இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைவந்துகொண்டிருந்த
# 32 தமிழ் அகதிகள் கைது!
# படகுகளும் பறிமுதல்!

## இலங்கைத் தூதர் ரொமேஷ் சந்திப்பு

(சென்னை)

இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தின, இந்திய வெளியுறவுச்செயலர் திரு ரொமேஷ் பண்டாரியை நேற்று டில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றை விரைந்து காண்பது பற்றிய இலங்கையரசின் உறுதிப்பாட்டை அப்போது அவர் மீண்டும் வலியுறுத்தினர்.

இலங்கையரசுடன் ஒருவாரகாலம் ஆலோசனை நடத்திய பின்னர் திரு. பேர்னுட் திலகரத்தின டில்லி திரும்பியுள்ளார். (ச)

## 8 பேர் இந்தியா தப்பிச்சென்றனர்!

(சென்னை)

**இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு படகுகளில் வந்துகொண்டிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் முப்பத்து இரண்டுபேர், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படடுள்ளனர். இவர்கள் வந்த படகுகளும் கைப்பற்றப் பட்டுள்ளன.**

இந்த விபரத்தை ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்த தாக அகில இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

"கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைத் தமிழ் அகதிகள் நாற்பது பேர் ஐந்து படகுகளில்இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்டனர். இவர்களில் முப்பத்தியிரண்டுபேர் இலங்கை கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர் கடற் படையினரைக் கண்டு அஞ்சிய எட்டுப்பேர், இந்தியாவுக்கு மீண்டும் தப்பி வந்து விட்டனர். படகுகளும் கைப்பற்றப்பட்டன. இந்தத் தகவல்கள் மண்டபம் அகதிகள் முகாமுக்கு கிடைத்துள்ளன." [ச]

## காவலூர்,பகுதியில் பீரங்கித் தாக்குதல்!
### ஏராளமான குடும்பங்கள் வெளியேற்றம்

(வேலணை)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று அதிகாலை முதல் மேற்கொண்ட பீரங்கி வேட்டுத் தாக்குதலால் ஊர்காவற்றுறைப் பகுதியில் இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன, நால்வர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து பதற்றமடைந்த மக்கள் குடும்பம் குடும்பமாக மூட்டை முடிச்சுகளுடன் தூரத்து கிராமங்களுக்கு அகதிகளாகச் சென்றடைந்தனர்.

கடற்படைக்குச் சொந்தமான கப்பலொன்றுக்கு வைக்கப்பட்ட கடல் கண்ணிவெடி தாக்குதல் முயற்சி சம்பந்தமாகவே, அப்பாவி மக்கள்

[5-ம் பக்கம் பார்க்க]

## உடனடித் தீர்வு காணுமாறு
### ராஜீவுக்கு தமிழக அரசு கோரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு தமிழக நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைக் கேட்டுள்ளார்.

தமிழக அரசின் பட்ஜட்டை சட்டசபையில் நேற்று தாக்கல்செய்து உரையாற்றுகையில் இதனைக்குறிப்பிட்ட அமைச்சர் நெடுஞ்செழியன் இலங்கையில் தமிழர் படும்தொல்லைகள் தமிழக மக்களுக்கும், அரசுக்கும் பெரும் கவலையைத்தருகிறதுஎன்றார். (வெ)

## அந்த பத்துச் சடலங்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான பத்துப்பேரின் சடலங்களும் கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இல்லாத காரணத்தினல் பிரேத பரிசோதனை செய்யப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளன,

இப்பத்துச் சடலங்களுடன் மேலும் இரு சடலங்களும்

(5ம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் சிறுவன் பலி!

(யாழ்ப்பாணம்]

நாவற்குழியில் பஸ் ஏறுவதற்காக நின்ற சிறுவன் ஒருவன் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து வந்ததுப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானர்.

நாவற்குழி கண்ணாடித் தொழிற்சாலையில் கடமை புரிந்துவிட்டு வீடு திரும்புவதற்காக பஸ் ஏறுவதற்கு நின்ற கதிர்காமநாதன் பாலமுருகன் என்ற 15 வயது சிறுவனே சூட்டுக்குப் பலியானவராவார்.

இவர் கொழும்புத்துறை மணிப்புரியைச் சேர்ந்தவர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் நடைபெற்றது. [ஐ)

## ஊர்காவல்படை இருவர் பலி

(திருகோணமலை)

ஊர்காவல் படையினருக்கும் போராளிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் இரு ஊர்காவல்படையினர் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானர்கள்.

திருகோணமலைப்பகுதியில் உள்ள கன்னியா என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. (ய-மா)

## அடகு நகைகள் கொழும்பில் வழங்கப்படமாட்டா!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கிகளில் அடகு வைத்தோருக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து நகைகளை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மக்கள் வங்கி யாழ் பிராந்திய முகாமையாளர் திரு. மு. கணேசசுந்தரம் தெரிவித்துள்ளார்.

"அடகு வைத்தோர் சங்கம் யாழ்ப்பாணத்திலேயே நகைகள் வழங்கப்படல்வேண்டும்

[5 ம் பக்கம் பார்க்க]

## "வாசலில் நின்றவர் சூடுபட்டு விழுந்தார்."

[யாழ்ப்பாணம்]

"நாவற்குழி கிளாஸ் தொழிற்சாலை முன்வாசலைத் தட்டும் சத்தம் கேட்டது. திறந்து பார்த்தபோது பாலமுருகன் வேலைக்கு வந்திருந்தார். அவரை உள்ளே- அனு

(5ம் பக்கம் பார்க்க)

## கைதான 75 பேரும் உயிருடன் இருப்பதாகதகவல்

(கொழும்பு)

ஒரு வருடத்திற்குமுன்னர் செட்டிகுளம், சேமமடு ஆகிய இடங்களில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட 75 பேர் உயிருடன் இருப்பதாக சில தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர், ஒரு வாரத்துக்குமுன்னர் சித்தசுவாதீனமான நிலையில் வவனியாவுக்கு வந்துசேர்ந்ததைத்தொடர்ந்து மற்றவர்களும் உயிருடன் இருக்கலாமென நம்பப்படுகிறது.

[5ம் பக்கம் பார்க்க]

## உடுவில், மானிப்பாயை வட்டமிட்ட விமானம்

(யாழ்ப்பாணம்)

உடுவில், மானிப்பாய் பகுதிகளுக்கு மேலாக நேற்றுமாலை சிறிய விமானம் ஒன்று பல தடவை வட்டமிட்டு பறந்த வண்ணமிருந்தது.

அண்மைக்காலங்களில்இடம்பெற்றது போன்று விமானக் குண்டுவீச்சு நடைபெறுமோ என்று இப்பகுதிகளின் சுற்றுவட்டத்திலுள்ள மக்கள் அச்சம் கொண்டிருந்தனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் வட்டமிட்ட "ஷிப்பிளேன்" சுமார் பதினைந்து நிமிடங்களின் பின்னர் அவ்விடத்தை விட்டு பறந்துசென்றுவிட்டது. [மா]

## அடகுவைத்தோர்சங்கம்: பிற ஸ்தாபனங்களுக்கும் அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள மக்கள் வங்கி கிளை அலுவலகங்களின் முன்பாக தாங்கள் அடகு வைத்த நகைகளை மீளளிக்குமாறு கோரி மீண்டும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வாடிக்கையாளர்கள் இப்

[5ம் பக்கம் பார்க்க]

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். C-1220

அக்ஷய வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. விலை ரூபா 16/- கிடைக்குமிடம்: சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரியகடை, யாழ்ப்பாணம். வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு. (C 1208)

காரைநகர் களபூமி பொன்னுவளையில் 8½ பரப்புக் காணியில் கிணற்றுடன் சிறிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: அருட்செல்வம் நடராசா, 26/2, சேர் பொன் இராமநாதன் லேன், திருநெல்வேலி. (C- 1266)

இந்தியன் பழைய ஓடு 2000, கதவு, நிலையன்னல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. சிவா, இல. 9, மாட்டீன் லேன், யாழ்ப்பாணம். C 1277

## தேவை

மரசடைச்சல் வேலைகள் தெரிந்த, பழக விரும்பும் பெண்கள் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 21 - 03 - 86 முகவரி: விளம்பர இல: C 1269 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். C 1269

அபிராமி அச்சகத்திற்கு அச்சுவேலை பழகியவர்களும், பழக விரும்புபவர்களும் உடன் தேவை. பெண்களும் விண்ணப்பிக்கலாம். அபிராமி அச்சகம், 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 1287)


அச்சக வேலைகள் பயில்வதற்கு படித்த இளைஞர்கள் தேவை. நற்சான்று பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும் கு. வி. அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C 1285)

பெண் விற்பனையாளர்கள் தேவை. அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் 25-3-86க்கு முன் தொடர்பு கொள்ளவும். ரெலிகோணர், நவீனசந்தை, சாவகச்சேரி. (C 1288)

## தவறிவிட்டது

இல. 512450407 V கணேஷ் சிவராசசிங்கம் (யாழ்ப்பாணம்) பொலிகண்டி, வடமராட்சி என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க சிவராசசிங்கம், 7, அன்னச்சத்திர லேன், கந்தர்மடம். யாழ்ப்பாணம். C1291

## மூன்றும் ஆண்டு நினைவு அஞ்சலி



அ. ம.
அந்தோனிப்பிள்ளை

நீங்கள் மறைந்துவிட்டீர்கள். நாங்கள் மறக்கவில்லை.
தங்கள் நினைவு நாளான இன்று எங்களுடைய அஞ்சலி

குடும்பத்தவர்கள்.

குருமடம்.
கரம்பொன்.

(C 1224)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திரு. சுந்தரம
ஜெயச்சந்திரன்

(பொறியியலாளர்- இலங்கை மின்சாரசபை கொழும்பு)

அன்னையின்மடியில்:
13 - 3 - 1948

இறைவன் அடியில்:
16 - 2 -'1986

செல்லக்கதையினாலே அனைவரையும் சிந்திக்க வைத்து திடீரென எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்ட எங்கள் நெஞ்சம் மறவாத அன்புச் செல்வமே. இச்சிறு வயதில் இறைவன் உன்னை ஏன அழைத்தானோ? உன்பாச உள்ளங்கள் ஏங்குதையா. நீ தோன்றுயோ மீண்டும் என்று வாடுதையா உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
ஐயா, அம்மா,
சகோதரர்கள்,
சகோதரிகள்,
மாமாமார், மாமிமார்,
மச்சான்மார்,
மச்சாள்மார்,
பெரியப்பாமார்,
பெரியம்மாமார்,
சித்தப்பாமார்,
சின்னம்மாமார்,
மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.
C 1289


# மயான, பொதுசனசந்தைப் புனரமைப்புக்கு அபிவிருத்திநிதியிலிருந்து ஒரு லட்சம்ரூபா

(கரவெட்டி)

வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானப் புனரமைப்புற்கும், கற்கோவளம் பொதுச் சந்தை புனரமைப்பிற்கும் யாழ்மாவட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாவை யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. எம். பஞ்சலிங்கம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

தும்பளை கிராமசேவையாளர் பிரிவிலுள்ள வராத்துப்பளை ஆனைவிழுந்தான் புனரமைப்புக்கும் கற்கோவளம் பொதுச்சந்தை புனரமைப்பிற்கும் நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென முன்னுள் கிராமோதயசபைத்தலைவர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. வி, எம், பஞ்சலிங்கம் யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் ஆகியோரைக் கேட்டிருந்தார்

வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயாணம்புனரமைப்புக்கு ஏற்சனவே 25000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அந்நிதி பற்றுக்குறையாக இருப்பதாகச் சுட்டிக் காட்டியதையடுத்து மேலும் 25000 ரூபாவும்கற்கோவளம் பொதுசனசந்தை புரனமைப்பிற்கு 50,0.0 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியை ஒதுக்கீடு செய்து தந்துதவிய யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. வி. எம். பஞ்சலிங்கத்திற்கும் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட்டிற்கும் முன்னுள் கிராமோதயசபைத் தலைவர் திரு திருச்செல்வம் நன்றி தெரிவித்துள்ளார். இம் மயானப் புரனமைப்பு சந்தை புனரமைப்பு வேலைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப் படுமென யாழ். அபிவிருத்திச்சபைபுலோலி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. பெ. கனகசபாபதி தெரிவித்தார்.

ஸ்ரீ வல்லிபுர ஆழவார் கடற்தீர்த்தமாடும் கற்கோவளம் கடற்கரைவீதி 50,0000 ரூபா செலவிலும் நகர்கோயில் கடற்கரைவீதி 70,0000 ரூபா செலவிலும் திருத்தி புனரமைப்புச் செய்யப்படவுள்ளன இதற்கான நிதி ஒதுக்கீடும் யாழ்மாவட்ட அபிவிருத்தி நிதிஒதுக்கீட்டிலிருந்து யாழ் அபிவிருத்திச்சபைச் செயலாளர் இவ்வருடம் ஒதுக்கீடு செய்துள்ளார்.


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

சண்டிலிப்பாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து பெண் செல்லம்மா என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்கள் விடயத்தில்.

—மரணமெய்தியவர்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல. ரீ/270

இராமு நாகமுத்து,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்,
மனுதார்.

எதிர்

1. நாகமுத்து தவராசா.
2. மாரிமுத்து பாலசிங்கம்.
3. பாலசிங்கம் பெண் இந்திராணி.
4. மாணிக்கம் சுப்பிரமணியம்.
5. சுப்பிரமணியம் பெண் தேவராணி.

எல்லோரும் சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

எதிர்மனுதார்கள்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்திற் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 7ம் திகதியன்று முற்பகல் 9- 00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு:
ந. தம்பிமுத்து,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 1241)


## கருத்தரங்கு

[பண்டத்தரிப்பு]

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களின் கருத்தரங்கு ஒன்று எதிர் வரும் 21ம் திகதி வெள்ளிக்கிழமையன்று பண்டத்தரிப்பு பட்டின பொசதுன நூல்நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்கர் எஸ். சரவணபவன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் சனசமூக நிலையங்களின் சமாஜமும் உருவாக்கப் படவுள்ளது இதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எஸ், ரி கதிரவேற்பிள்ளை செய்துள்ளார்.


மு. க. முத்துக்குமார்,
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

## முதற்கண் முற்றுகும் ஆணை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்

கரவெட்டி வடக்கு நெல்லியடி காலஞ்சென்ற முருகேசு இராஜதுரை என்பவரது மரணசாதன சொத்து விடயத்தில்,

—மரணமெய்தியவர்.

வழக்கு இலக்கம்;
மரணசாதன நியாயாதிக்கம் } 1236/ Testy

முருகேசு இராசதுரை கைம்பெண் சரஸ்வதி, மகாத்மா ஒழுங்கை, நெல்லியடி. கரவெட்டி வடக்கு,

மனுதார்.

மேற்குறித்த இந்நீதிமன்றில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மரணமெய்தியவரின் மரணசாதனத்தை நிரூபிப்பதற்காக மேலே குறித்துள்ள இலக்கம் கோண்ட வழக்கு தொடரப்பட்டுள்ளதென்றும் குறித்த வழக்கில் 1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி முதற்கண் முற்றுகும் ஆணை அவ்விதமாகப் பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி.

மன்றின் ஆணைப்படி,
சண்முகம் நடராசா,
(ஒப்பம்)
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

வரைவு:
மு. க. முத்துக்குமார்,
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.
(A 379)


## தையல் பயிற்சி வகுப்புகள்

(உடுவில்)

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பமாக உள்ளது. கல்வி இலாகாவின் ஆதரவில் பழைய மாணவர் சங்கத்தினர் இத்தொழிற் பயிற்சி வகுப்புகளை நடாத்த உள்ளனர்,

இவ்வகுப்புக்களில் கலந்து கொண்டு பயிற்சி பெற விரும்புவோர் ஆசிரியை திருமதி சற்குணராசாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## தவக்காலச் சிந்தனை



27-ம் நாள்

முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும் என்பார்கள். முன்னையது வேதனையை உருவாக்குகிறது. பின்னையது வேதனையைப் போக்குகின்றது. அழிவின் சின்னம் மீட்பின் சின்னமாக மாறுகிறது.

வேதனையில் வீழ்ந்த மக்கள் முணுமுணுத்து இறைவனை தூஷித்தபோது கொடிய விஷப்பாம்புகளால் தீண்டப்பட்டார்கள், அவர்கள் மனம் வருந்திய போது அவர்கள் எவ்வழிகேடுற்றார்களோ அவ்வழியே ஈடேற்றம் பெற அழிவின் சின்னத்தை கோலால் உயர்த்தி அதனை நோக்கிய போது குணம்பெற்றார்கள்.

கிறீஸ்துவின் சிலுவையும் அழிவின் சின்னம் இகழ்ச்சியின் சின்னம் ஆனால அவர் அதனை ஏற்றுக் கொண்டபோது அது அழிவின் வழியாக மாறியது. நமக்கு விடுதலையை பரிசாக தந்தது.

நாமும் துன்பத்தை வெறுக்கிறோம். வேதனைகளை தாங்கத் தயங்குகிறோம். கஷ்டங்களையும் அழிவுகளையும் இழப்புகளையும் கண்டு துவண்டு நாம் மடிகிறோம என பெருமூச்சு விடுகின்றோ. கலகம் பிறந்தால் நீதி பிறக்கும் என்பதை மறக்கிறோம் பாடுபட்டால் பட்டம் உண்டு என்பதை கண்டு கொள்ள தயங்குகிறோம்.

கிறீஸ்துவின் சாவு ஒரு தோல்வியா? இல்லை அது அவரது உயிர்ப்புக்கு இடப்பட்ட வித்து.

கொடுப்பதன் மூலம்தான் பெற்றுக் கொள்ள முடியும், மடிவதன் மூலம் தான் வாழ முடியும் என்பதற்கு சான்று பகர்ந்த கிறீஸ்தவின் வாழ்வே நமக்கும் உறுதியையும் உற்சாகத்தையும் தரட்டும்.

அருட்திரு இ. ஜே.
அருமைநாயகம்.

# இலங்கையில் அமெரிக்கா கண் வைக்கிறது!

## இந்திய கம்யூ. கட்சி கண்டனத் தீர்மானம்

(புதுடில்லி)

''இலங்கையில் கடற்படைத் தளமொன்றைப் பெறுவதற்காகவும், இந்துமா கடலை ராணுவ தளமாக்கல் முயற்சிக்காகவும் அமெரிக்கா இலங்கையைப் பயன்படுத்தி வருகிறது'' என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பட்னாவில் நடைபெறும் கட்சியின் 13வது மாநாட்டில், அமெரிக்காவுக்கு எதிராக வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

ஒன்றுமறியாத தமிழ்மக்களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தை மூலம் அமைதித் தீர்வொன்றைக் காண முயலுமாறு இலங்கை அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது என்ற தீர்மானமும் கட்சியின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தான், இலங்கை மற்றும் வேறு இடங்களின் தளங்களின் வசதியோடு அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகள், இந்தியாவை ராணுவ ரீதியில் சுற்றிவளைக்க முயல்கிறது என்பது நன்கு தெளிவாகத் தெரிகிறது என்றும் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. (பி)

# வட்டக்கச்சியில் பல இளைஞர்கள் கைது

(கிளிநொச்சி)

வட்டக்கச்சிப் பகுதிக்கு நீண்டநாள் இடைவெளிக்குப் பின்னர் இராணுவம் சென்று மறுநாள் காலைவரை தேடுதல் நடத்தியதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் உருவாகியது.

இச்சம்பவத்தில் பல இளைஞர்கள் கைதாகி கிளிநொச்சி இராணுவமுகாம் கொண்டு செல்லப்பட்டனர். நேற்று முன்தினம் அதிகாலை வயல் வேலைக்கு சென்ற சிலரும் விவசாய உபகரணங்களுடன் கைதாகி உள்ளனராம்.

வட்டக்கச்சி கிருஷ்ணன் கோவில்பக்கமே கூடுதலாக சோதனையிடப்பட்டதாக தெரியவந்தது.

இதேவேளை நேற்றும் கிளிநொச்சி நகரப்பகுதியில் பெருவாரியான இராணுவம் கவச வாகனங்கள் சகிதம் நிலை கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

## இலங்கைத் தமிழர் விஷயம்: ''பயனுள்ள நடவடிக்கை எடுக்காவிட்டால் அனைவரும் அழிவர்''

### புத்தக வெளியீட்டில் கருணாநிதி

(சென்னை)

''பயனுள்ள துரித நடவடிக்கைகளை மேற்கொண்டால் தவிர இலங்கைத் தமிழர்கள் மொத்தமாக அழிக்கப்பட்டுவிடுவார்கள்'' என்று திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி, 'இலங்கைத் தமிழர் போராட்ட வரலாறு' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் நேற்றுமுன்தினம்பேசுகையில் எச்சரித்தார்.

இலங்கைத் தமிழர்களுக்கு இலங்கை அரசினால் இழைக்கப்படும் கொடுமைகளை விபரமாக எடுத்துக்கூறிய திரு. கருணாநிதி, இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக எதிர்கால செயல் திட்டத்தைப் பற்றி முடிவெடுக்க 'தமிழீழ ஆதரவாளர் அமைப்பு' (ரெசோ) விரைவில் சென்னையில் கூடவுள்ளது என்றும் கூறினார். (பி)

## வாய்க்கால் திருத்தியமைப்பு

(உடுவில்)

சங்குவேலியிலுள்ள கரந்தன் பகுதியில் வாய்க்கால் ஒன்று இளைஞர்களால் சிரமதான அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது சங்குவேலி விவசாய அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் இச்சிரமதானப்பணியை மேற்கொண்டனர்.

## ஐ. நா. விலிருந்து சுவிஸ் தொடர்ந்து விலகி இருக்கும்!

(பேர்ண்)

சுவிற்ஸர்லாந்து ஐ நாவிலிருந்து தொடர்ந்தும் விலகியே இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1815 ம் ஆண்டு தொடக்கம் சர்வதேசரீதியில் இணங்கப்பட்ட நடு நிலையொன்றினைக் கைவிட்டு விட்டு, சுவிற்ஸர்லாந்து ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் 160 வது உறுப்பு நாடாக இருக்கவேண்டும் என்ற அரசபிரேரணை ஒன்றை அந்நாட்டு மக்கள் நிராகரித்து விட்டார்கள்.

சர்வதேச நிகழ்ச்சிகளின் அரங்கில் சுவிற்ஸர்லாந்துமுழு அளவிலான பணிகளை மேற்கொள்ளுவதில் இந்த நடுநிலைத்தன்மை தடுத்து விடுகிறது. (பி)

## யூகங்கா பரிசு பெற்றது

(பாரிஸ்)

பாரிஸில் நடைபெற்ற திரைப்பட விழாவில் இரண்டு பாரத விவரணபடங்களுக்கு பரிசுகள் கிடைத்துள்ளன.

'யூகங்கா' என்ற படத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளது. கங்கை ஆற்றின்மீது நடக்கும் அன்றாட வாழ்க்கையினை மௌனத்தில் மிக அற்புதமாகச் சித்தரித்துக் காட்டும் இந்தப் படத்தை பிரான்ஸில் வசிக்கும் திரு. விசுவநாதன் இயக்கியுள்ளார்.

'பொம்பே அவர் சிற்றி' என்ற விவரணபடத்தை தயாரித்த ஆனந் அக்வதனுக்கு நடுவர் விசேடப் பரிசு வழங்கப்பட்டது.

இந்த ஒருவார காலப் போட்டியில் 27 நாடுகளிலிருந்து சுமார் 60 படங்கள் திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (பி)

## வடமராட்சியில் சனிக்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவில்லை

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் குறிப்பாக பருத்தித்துறை, புலோலி, நெல்லியடி, உடுப்பிட்டிப் பகுதிகளில் கடந்த சனிக்கிழமையன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று கடைகள் யாவும் திறக்கப்பட்டிருந்தன. சந்தைகள் யாவும் கூடியிருந்தன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட சனிக்கிழமையில் பணியாற்றும் சகல அலுவலகங்களும் திறக்கப்பட்டிருந்தன. வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களும் மினிவான்களும் தமது சேவைகளை வழமைபோல் நடாத்தின. வீதிகளில் சனநடமாட்டம் வழமையிலும் அதிகமாகக் காணப்பட்டது.

கடந்தவாரம் யாழ் ஆஸ்பத்திரியிலும் முத்திரைச்சந்தியிலும் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களையடுத்து மூன்று நாட்கள் மட்டுமே வடமராட்சிப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது நான்காவது நாளான சனிக்கிழமை வடமராட்சிப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு எதுவித கோரிக்கைகளும் விடுக்கப்படவில்லை என்று வர்த்தகர்களும், பொதுமக்களும் தெரிவித்துள்ளனர்.

## ராணுவத்தை அனுப்புமாறு குமரி அனந்தன் கோருகிறார்

(சென்னை)

விமானத்தாக்குதல் நிறுத்தம் குறித்தும் தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்புவது பற்றியும் இலங்கை, அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி அறிவித்துள்ளது. அவருக்கே உரிய ஏமாற்றுத்திட்டம்'' என்று காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் பத்திரிகையாளர்களிடம்நேற்றுக்கூறியுள்ளார்.

இந்திய இராணுவத்தை அனுப்புவதே இலங்கைத்தமிழர்களையும், இந்தியாவையும் காக்கும் என்று தாம் கருதுவதாகவும் திரு. குமரி அனந்தன் தெரிவித்தார். (ச)

## செயற்கைமுறை சினைப்படுத்துதல்

(அராலி)

கிராவேலை கிராம அபிவிருத்திச் சங்கத்தில் அமைந்துள்ள செயற்கை முறைச் சினைப்படுத்தும் நிலையத்தில் கடந்த ஒன்பது மாத காலத்துள் நூற்றுக்கணக்கான கால்நடைகளுக்கு செயற்கை முறையிலான சினைபடுத்துதல் நடைபெற்றுள்ளது. இது வெற்றியளித்துள்ளதாக இந்நிலைய அதிகாரி திரு ந. விவேகானந்தன் தெரிவிக்கிறார்.

## ''தொலைக்காட்சி படங்களால் கல்வி பாதிப்படைகின்றது''

(பண்டத்தரிப்பு)

''எமது மாணவர்களின் கல்வி இன்று பலவகையிலும் பாதிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக வீடுகளில் பலவற்றில் உள்ளூர் தொலைக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டுவரும் திரைப்படங்கள் எமது இளம் சந்ததியின் படிப்பைப் பெரிதும் பாதித்து வருகின்றன. இதனால் அவர்களின் உள்ளமும், ஒழுக்கமும் பாதிக்கப்படுகின்றது இதனையிட்டு பெற்றோர்கள் மிகவும கவனமாக இருக்கவேண்டும்.''

இவ்வாறு சில்லாலை றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு பி இருதயதாஸ் அடிகள் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. ஏ. எஸ். லோறன்ஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பங்குத்தந்தை அருட்திரு இருதயதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில்; இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கடந்தகாலங்களில் பாடசாலை வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் ஆற்றியபணிகளைப் பாராட்டினார்.

சங்கத்தின் செயலாளரும், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடபிராந்திய ஆணையாளருமான டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தனதுரையில்; ''இப் பாடசாலையின் வளர்ச்சியிலே எமது கிராமத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது இங்கு பரிசளிப்பு விழாவை கடந்த ஆண்டு சிறப்பாக நடாத்தவும் பாடசாலைத் திருத்தவேலைகளை மேற்கொளளவும் ஒத்துழைப்பும் ஆதரவும் தந்துதவிய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்'' என்றார்.

அதைத்தொடர்ந்து சங்க நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தலைவராக வித்தியாலய அதிபர்திரு ஏ. எஸ். லோறன்ஸும், செயலளராக டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பியும் பொருளாளராக திருமதி சி. சிலியா இராயப்புவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# ராஜீவுக்கு ஜே. ஆர். செய்தி: புதிய அணுகுமுறையா?

(புதுடில்லி)

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடமிருந்து விசேட செய்தியொன்றை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு கையளிக்கும் பொருட்டு: இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் திரு. பேர்னாட் திலகரத்தின நேற்றுமுன் தினம் புதுடில்லி வந்து சேர்ந்தார்.

இனப்பிரச்னை குறித்து இலங்கை அரசுடன் ஒருவாரகாலம் ஆலோசனை நடத்திவிட்டு புதுடில்லி மீண்ட திரு பேர்னாட் திலகரத்தின, அந்த விசேட செய்தியின் சாரம் குறித்து கருத்து வெளியிட மறுத்துவிட்டார்.

இதேவேளையில் இச்செய்தி; தற்போதையஇந்தியஇலங்கை நிலையில் புதியதோர் முன்னேற்றத்துக்கு வழிகோலும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். (பி)

## பிரான்ஸ் தேர்தல்

(பாரிஸ்)

பிரான்ஸில் தேசிய சட்டசபைத்தேர்களில் எதிர்தரப்பு வலதுசாரி கூட்டணி மிகக் குறைவான பெரும்பான்மை வலுவைப் பெறும் நிலையிலுள்ளதாக அறியப்படுகிறது.

அந்தநாட்டில் 577 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. (பி)

## கரணவாயில் பாதுகாப்புக்குழு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் தெற்கு வள்ளுவர் சனசமூக நிலையத்தின் முயற்சியினால 'ஊர் பாதுகாப்புக்குழு' ஒன்று கரணவாயில் அண்மையில் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

## அராலியில் மயிலிட்டி அகதிகள்

(அராலி)

பலாலி இராணுவமுகாமில் இருந்து ஆயிரம் மீற்றர் சுற்றுவட்டத்துள் அடங்குகின்ற பகுதிகளில் வாழும் மக்கள் இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகங்களுக்கும், ஹெலிகொப்டர் தாக்குதல்களுக்கும் அஞ்சி இப் பகுதியைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு வெளியேறியவர்களில மயிலிட்டியைச் சேர்ந்த 39 பேர் அராலி இந்துப் பாடசாலையில் தங்கியுள்ளார். இவர்களுக்கான உணவு வகைகளை அராலி வாழ் இளைஞர்கள், பொதுமக்கள் வழங்கி வருகிறார்கள்.

### மணிவாக்கு

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்

— குறள்

[பேசநேரிடுமானல் பிற்பயன் விளைவிக்கும் பயனுடைச் சொற்களையே தெரிந்து பேசுக. நற்பயன் விளையாத பயனிலா சொற்களைப் பேசாது நீக்குக.]

# நமது நோக்கு

## மகோற்சவ காலம்

பங்குனி தொடக்கம் கோடை காலம் வரை யாழ்ப்பாணத்தின் பிரபல கோவில்களில் மகோற்சவம் தொடர்ந்து நடைபெறுவது வழக்கம்.

வெயில் அதிகரித்தகாலத்தில் ஆங்கிலத்தில் பேசும் ஆசையுடையவர்கள் 'hot like Lent' என்று சொல்வது இக்காலத்தைக் குறிக்கும்.

லெந்து (lent) என்பது கிறிஸ்தவர்களுக்கு நோன்பு காலம். நாற்பதுநாற்களைக் கொண்ட இக்காலம் இயேசுநாதர் வனந்தரத்தில் நோன்பிருந்து தம்மைத் தாமே துறந்து தம் திருப்பணிக்கு வேண்டிய ஆன்மீக ஆற்றலையும் வழிநடத்தலையும்பெற்றகாலம்.

இந்த நோன்பை கிறிஸ்தவர்கள் கடைப்பிடிப்பது போல இங்கு வாழும் சைவர்கள் தத்தம் கோவில்களில் கொடியேற்றம் தொடக்கம் தேர், தீர்த்தம் வரைக்கும் நடைபெறும் விழாவை விரதகாலமாகக் கொள்வது பண்டைய காலம்தொட்டு இன்று வரைக்கும் அனுட்டித்து வரும் ஆன்மீகப் பயிற்சியாகும்.

லெந்தென்னும் நோன்பு காலம், இன்று சிலருக்கு வெப்பகாலமென்ற கருத்தைக் கொடுப்பதுபோல கோவில் திருவிழாக்காலம் ஒரு களியாட்டவிழாக் காலம் என்ற மாற்றத்தை கொண்டது எங்கள் தவக்குறைவை விளக்குகிறது. இன்று இந்த இழிநிலையிட்டு நாம் விசனபபடவேண்டியிருக்கிறது.

போத்துக்கேயர் காலத்தில் கோவில்கள் உடைத்து எரிக்கப்பட்டது போல இன்றும் எங்கள் கோவில்களுககு இந்தக் கதி நேரிட்டிருக்கிறது.

அக் காலத்தில் வாழ்ந்த மக்கள் இத் தீய செயலால் ஏற்பட்ட துன்பங்களை எவ்வாறு சமாளித்தனர் என்பதை வரலாறு கூறுகின்றது.

எங்கள் காலத்திலேயே சுமார் 60 வருடங்களுக்கு முன் வாழ்ந்த வைதிகமுதியோர் விரதமிருந்து உணவு அருந்தியபின் இலையை கூரைக்குள் செருகுவது சாதாரணமாயிருந்தது.

இதற்குக் காரணம் திரிக்கப்பட்டு கூறிய போதும், அந்நிய ஆட்சியில் விரதம் போன்ற சமயக் கிரியைகள் ஆட்சிக்கு வெறுப்பாய் யிருந்தமையால் தண்டனையைத் தவிர்க்க இவ்வித தந்திரம் தேவைப்பட்டது.

இக்காலத்தில் இத்தகைய மிலேச்சதனம் அகன்ற போதிலும் கோவில் வழிபாடும், அதற்குரிய தத்துவங்களை தினசரி வாழ்வில் செயற்படுத்தும் அனுட்டானங்களும் அருகிவிட்டன.

திருவிழாவுக்கு உயிர் ஊட்டுவது, புலன்களைக் கவரும் களியாட்டமே; காலத்துக்குக்காலம் களியாட்டத்தின் தோற்றமும் நிறைவும் மாற்றமடைகின்றன. எனவே கோவில் விழாவென்றல் களியாட்டம்பிரதானம்; எம் சமூகத்தின் ஆன்மபலம் எம்மட்டில் இருக்குமென்பது சிந்தனைக்குரியது.

தொலைக்காட்சி கிராம மக்களையே கைப்பற்றிய இக்காலத்தில் நோன்பு, உபவாசம், விரதம்போன்ற ஆன்மபலம் அளிக்கும் சாதனைகளை விபரிப்பது வீண் போலதோன்றும் ஆனல் அப்படியல்ல என்பதே இன்று தமிழ் மச்களுக்குண்டான பரிசோதனை காலம் கற்பிக்கும் பாடம்.

இன்று எமது மக்களை வாட்டிவரும் கொடுமைகள் ஒழிய இந்த புனித காலம் எவ்வாறு பயன்படும்?

பிறருக்காக தம்மை துறந்து, தமது வருங்காலத்தை பணயம் வைத்து போராடும் எமது இளைஞர்கள் நாட்டின் எதிரிசள் அல்ல. இந்த நாட்டின் சுபிட்சத்துக்கு முட்டுக்கட்டையாசவிருக்கும் சுயநல ஆட்சியை எதிர்த்தே எமது போராளிகள் தம்முயிரை அர்ப்பணித்திருக்கின்றனர்.

எங்கள் வரலாற்றில் நாம் என்றும் காணுத வீரம், தீரம், தியாகம் என்ற பிறர் நலம் கருதும் பண்புகளை நாம் சங்க நூல்களில் வாசித்திருக்கிறோம். இன்று நாம் கண்முன் காண்கின்றோம்.

தோல்வி என்ற சொல்லுக்கு தங்கள் அகராதியில் இடமில்லையென்று துணிந்திருக்கும் சுதந்திர வீரர்களை நாம் முன்மாதிரியாகக் கொண்டு அவர்களின் தீரத்துக்கு எவ்வித பங்கமும் ஏற்படலாகாதென்ற பிரார்த்தனையே இன்று எமது விரதம்

புதிய சமூகம் ஒன்று உருவாகிக்கொண்டிருப்பது எம்மிற் பலருக்குப் புலப்படாது நாம் வாழஎத்தனை பேர் தினந்தோறும் சாகின்றனர். இதன் அர்த்தம் என்ன?

பிறர் நிறைவுபெற நாம் ஒவ்வொருவரும் நம்மை அர்ப்பணிக்கத் துணிவதே இன்றைய புனித காலத்துக்கேற்றசெயலாகும்.

## ஆதீனத்தில் அப்பர்சுவாமிகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்வலமாகக் திருக்கேதீச்சரம் செல்லும் அப்பர்சுவாமிகள் திருவுரு 19ம் திகதி புதன்கிழமை முதல் சிலதினங்கள் நல்லை ஆதீனத்தில் இருக்கும் எனவும், புதன்கிழமை காலை பழம்றோட் பிள்ளையார் கோவிலிலிருந்து ஊர்வலமாத ஆதீனத்துக்குச் செல்லும் எனவும் அப்பர் திருவுருவ ஊர்வல நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

அரசடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து 17ம் திகதி காலை அப்பர்திருவுரு இந்து மகளிர் கல்லூரிக்குச் சென்று அங்கிருந்து நண்பகல் புறப்பட்டு பழம் றோட் பிள்ளையார் கோவிலை அடைந்தது. (ப)

# தொண்டமானுடன்மோதலைத் தவிர்த்து வருகிருராம் காமினி

## 'புரண்ட்லைன்' சஞ்சிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டி

''இந்த அரசாங்கத்தின் ஐக்கியமும் கட்டுக்கோப்பும் கலைந்து விடாமல் பாதுகாப்பது எனது கடமை. ஆதனுல் தான் சுமார் இருவருடங்களுக்கு முன்னர் திரு. தொண்டமான் தலைமைவகிக்கும் இ. தொ. கா மேற் கொண்ட வேலைநிறுத்தத்தை, அது தோல்வியடையும் நிலையில் இருந்துங்கூட, அவருக்கு சாதகமாக தீர்த்துவைக்க ஜனதிபதியைக் கோரினேன். அத்துன் திரு தொண்டமான் இவ் விஷயத்தில் அவமானப்படுவதை நான் விருப்பவில்லை. நாங்கள் திரு தொண்டமானை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும். அதனுல் அவருடன் மோதல்களை தவிர்த்து வருகின்றேன்.''

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. காமினி திசாநாயக்க 'இந்திய சஞ்சிகையான 'புரொன்ட்லைனு' க்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார். அப்பேட்டியில் அவர் கூறியதாவது:

''மலையகச் சம்பவங்களைப் பொறுத்தவரையில், எனக்குக் கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம் 'ஈரோஸ்', 'புளொட்' இயக்கமும் மலையகப்பகுதியில் ஊடுருவியுள்ளன இது சரியாயிருந்தால், வன்முறைகளைத் திட்டமிடுவதில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பித்துள்ளது. அத்துடன் தலவாக்கொல்லையில் நிகழ்ந்த சம்பவத்திஞல் எழுந்த பதற்ற நிலையுடன் இந்த அத்தியாயமும் சேர்ந்து கலவரங்கள் ஆரம்பித்திருக்கலாம்.

''மலையகத்தமிழருக்குப் பிரஜாவுரிமை வழங்கியமைக்கும், வன்செயல்களுக்கும் இடையே எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆயினும் இந்த வன்செயல்கள் கவலைக்கிடமானவை.''

''மலையகமக்கள்ளுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டதையிட்டு நான்மகிழ்ச்சியடைகிறேன்.

### மலையகத்தில் தேர்தல் நிலைமை

''ஆயினும் அதே நேரத்தில் ஒரு கண்டிப் பிரஜை என்ற ரீதியில், ஏற்கனவே மலையகத்தில் உள்ள தேர்தல் நிலைமைகள் மாறுவதை நான் விரும்பவில்லை. அதனுல் சகலருக்கும் நன்மையளிக்கக் கூடிய விதத்தில் ஒரு தீர்வு காணப்பட வேண்டும்.

''இதற்காக, இரு சமுகத்தவரிடையே நிழுந்தும் [மலையகத்தில்) சமஎண்ணிக்கை கொண்டபாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படக்கூடிய ஒரு புதிய தேர்தல் முறைபற்றி நான் ஆலோசித்து வருகிறேன்.

''என்னைப்பொறுத்வரையில் இந்நாட்டில் கண்டி சிங்களவர், கீழ்நாட்டு சிங்களவர், வடக்கு கிழக்கு வாழ் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் போன்ற பல சமூகங்களையும் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். எல்லோருக்கும் சமஅந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும். யாரும் ஒதுக்கப்படக்கூடாது. யராவது ஒதுக்கப்படுகிருர்களெனில் வன்முறைகள் ''தான் பிரதிபலன்''

### தமிழர் சிங்களவர் ஒற்றுமைபற்றி

''இந்த இரு சமூகத்தவரும் ஒற்றுமைப்படல் அவசியம். ஒரு வேறுவேருன வாழ்வை நாம் தொடர்ந்து வாழமுடியாது. அதற்காக இந்துக்கள் அனைவரையும் பௌத்தர்களாக மாற்ற வேண்டுமென நான் கூறவில்லை.

''தமிழ் மக்கள் தங்களுக்கென ஒரு தனியான கலாசாரத்தைக் கொண்டுள்ளனர். இவையெல்லாம் கணக்கிலெடுக்கப்பட வேண்டும்.''

### எல்லாளன் கெமுனுபற்றி

''எல்லாளன் - துட்டகைமுனு யுத்தம் வரலாற்றுசிரியர்களால் ஓரளவு மாற்றப்பட்டது. அதுஒரு தனிட்ட்ட யுத்தமோ அல்லது இனவாத யுத்தமோ அல்ல. துட்டகைமுனு தான் இந்நாடுமுழுவதையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த முதல் மன்னன்''.

### அமைச்சர் 'தொண்டா' பற்றி

''திரு தொண்டமான் சில தனித்துவ பண்புகளுடன் கூடிய ஒரு அரசியல் வாதியாவார். ஒரு தொழிற்சங்கவாதி என்ற ரீதியில் அவருடன் யாரும் இணையாக முடியாது. அடதநேரத்தில் அவருடைய சமூகத்துக்கு அவரே தலைவர். அதனுல் அவர் அதன் தேவைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் தொழிற்சங்க ரீதியினின்றும் அப்பாற்பட்டு எனது தொழிற்சங்கத்தை அரசியலில் பிரவேசிக்க விரும்பவில்லை''.

### இனப்பிரச்னை பற்றி

''இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இப்போது நடைபெற்று வருகின்றன. இங்கு ஒரு மனிதாபிமான பிரச்னையையே நாம் எதிர்க்கொள்கிறோம். அதனுல் இதனை மனிதாபிமான ரீதியில் அணுக வேண்டும்,

''மலையகத்திலிருந்து வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ள தமிழர்களை மீண்டும் மலையகத்தில் குடியமர்த்துவதுபற்றி நாம் இன்னமும் முடிவெடுக்கவில்லை''

தமிழில்: இ. செந்தில்

# கிழக்கில் தொடரும் ஒருதலை யுத்தம்!

[''இந்தியா ருடே'' சஞ்சிகையில் 'தல்வீன்சிங்' எழுதிய கட்டுரையின் இறுதிப்பகுதி'']

உருத்திரபுரம் என்னும் இடத்தில் தீவிரவாத இளைஞர்கள் மறைந்திருந்து பொலிஸாரைத் தாக்கியதில் ஜனவரி மாதம் 19ம் திகதியன்று இரு பொலிஸார் ஸ்தலத்திலேயே பலியானுர்கள். அதைத் தொடர்ந்து பாதுகாப்புப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போது 23 இளைஞர்கள் சுட்டுக்சொல்லப்பட்டனர்; இவர்கள் கூலித் தொழிலாளிகளும், பாடசாலை மாணவர்களும் காவலாளிகளும் மூன்று தேவாலய வேலையாட்களுமே ஆகும்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு தேவாலய குருவையும், மூன்று தேவாலயவேலையாளர்களையும் படையினர் ஓடுமாறு பணித்துவிட்டு பின்னுல் சுட்டதாக நேரடியாகக் கண்ட ஒருவர் கூறினுர்.

டிசம்பர் மாதம் 1ம் திகதி நடந்த சம்பவமொன்றில், இராணுவத்தினரின் 'ஜீப்' வண்டியை நோக்கி ஒரு 'கிறணேட்' வீசப்பட்டது. அதன் போது ஒரு இராணுவ உத்தியோகத்தர் பலியானுர். இதன் எதிரொலியாக ஐந்து அப்பாவித் தமிழ் பொது மக்கள் கொல்லப்பட்டார்கள், அவர்களது வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டது. இதன் போது நிர்க்கதியான அவர்கள் கந்தப்பர் ஜீவானந்தம் (40 வயது)செல்வநாயகம் குழந்தைவேல் (34 வயது), வேலுப்பிள்ளை பொன்னுத்துரை (35 வயது) வீரகுலசிங்கம் (30 வயது), பிள்ளைநாயன்தம்பி கந்தசுவாமி(36 வயது] என்போரே.

ஒன்பது தமிழ் இளைஞர்கள் மட்டக்களப்பு லேக் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.இச்சம்பவம் நவம்பர் மாதம் 11ந்திகதி நடந்தது. அவர்களில் இருவர் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள். ஒருவரின் பெயர் ஜூட் கோவிலி பரம்பில் (17 வயது) மற்றவரின் பெயர் ஸ்ரீதரன் சொக்கலிங்கம் (வயது17]

அருட்தந்தை சந்திரா பெர்ணண்டோ இச் சம்பவங்கள் பற்றிக் கூறுகையில் ''தற்போது நிலமை மிகமோசமாகிக்கொண்டு வருகிறது ஒரு அமைதியான தீர்வு வருமுன்னர் 14 தொடக்கம் 40 வயது வரையுள்ள சகல இளைஞர்களும் கிழக்கிலிருந்து அகற்றப்பட்டு விடுவார்கள்'' என்ருர் அவரது வாகனச்சாரதியும் படையினரால் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கி ஒரு கை வழங்க முடியாத நிலையிலுள்ளார்

கடந்த ஆறுமாதகாலமாக பாதுகாப்புப் படையினரின் திறன் முழுவதும், வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற அடிப்படைக் கொள்கையை வலுவிழக்கச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது. இதனடிப்படையிலேயே திருகோணமலையைச் சூழவுள்ள தமிழ் சமுதாயத்தின் மீது கொடூரமான, உக்கிரமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### இந்தியாவின் போக்கில் டிக்ஸிட் விரக்தி!

திருகோணமலைப் பகுதியில் தமிழ், முஸ்லிம், சிங்கள சமுதாயங்கள் சரிசமனுகவே கடந்த காலங்களில் இருந்து வந்தன. ஆனல் அண்மையில் நூற்றுக்கணக்கான தமிழ்க் குடிகளின் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு, வடபகுதிகளுக்கு விரட்டியடிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தின் கணிப்பின்படி திருகோணமலை மாவட்டத்தில் 8,645 தமிழர்கள் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். மிகுதியாகவுள்ள 19 800 பேரது

(7ம் பக்கம்பார்க்க)

## கூட்டுறவு பயிற்சி நெறி

24-3-86 ஆரம்பமாகும் கூட்டுறவுப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற க. பொ. தா. சாதாரண பிரிவு 4 திறமைச் சித்தியுடன் சித்தியடைந்தவர்கள் 21-3 86 கடற்கரை வீதியில் அமைந்த கூட்டுறவுக் கல்லூரிக்கு காலை 9 மணிக்கு சமூகமளிக்கவும்.

(C1292)

## கடைசிநேர வரிவிளம்பரம்

### வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ, ரீவி, மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து. சுருக்கெழுத்து - இரண்டு புதிய பிரிவுகள் 19-03-86 21-03-86 ஆரம்பமாகின்றன முதலிற் சேருபவருக்கு குறைந்த சட்டணம் அறவிடப்படும் சான்றிதழ் வழங்கும் நிறுவனம் யானது VISPA ENGINEERING, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (A 1279)

### தேவை

சோடாப்பெட்டி, சீமெந்து ஏற்றி இறக்கக்கூடிய கூலியாட்கள் உடனடியாகத் தேவை பிள்ளையார் ஸ்ரோர்ஸ், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (A 386)

### தவறிவிட்டது

மார்க்கண்டு சபாரத்தினம் ஆகிய நான் எனது அடையாள அட்டை இலக்கம்;- 612051950V கைதவறவிட்டு விட்டேன். கண்டுஎடுப்பவர்கள் தயவுசெய்துகீழ்க்காணும்விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்: அல்லது கடிதம் போடவும். M. சபாரத்தினம், காங்கேசன் ரவல்ஸ், காங்கேசன்துறை (C 1306)

பரந்தனில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினி பஸ்ஸில் உடுப்புகள், மருந்து வகைகள் மற்றும் ஜாதகக் குறிப்புகள் அடங்கிய நீல நிற சூட்கேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும், வி. யோகலிங்கம், 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம. (C 1298)

எம்பயர் திரையில்
10-30 2-30, 6-30, 9-15
விஜயகாந்-விஜி
புதுயுகம்

2வது வாரம்
19ம் திகதி மட்டும்
LIDO Jaffna
10-30, 2-30, 4-30, 6-30
THE STORY OF THE DOLLS
Colour
(Strictly for Adults)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் காரைநகர்

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திர மூலம் விற்பனை

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் 2500 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு உண்டு சாக்குகளை பெற விரும்புவோர் ரூபா 250 ஒப்பந்த முற்பணமாக வைப்பு செய்துதலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று 21-3-86 நண்பகல் 12 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகா.

(A384)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் குமாரன் இராமசாமி ஆச்சாரி



மலர்வு: 04-11-1929
உதிர்வு: 29-03-1985
திதி: 18-03-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடனும், பாசமுடனும் வாழ்ந்து அயராது உழைத்து எங்களை வாழவைத்த தெய்வமே, எங்களை மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு, மின்னாமல், முழங்காமல் மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே, மறைந்தாலும் எங்கள் உள்ளத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்ருர், உறவினர்.

60/2. பருத்தித்துறைவீதி யாழ்ப்பாணம். [C 1295]

## கைதான---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1984 டிசம்பரில் இடம் பெற்ற கொக்கிளாய், நாயாறு முகாம்கள் தாக்குதலின் பின்னர் செட்டிகுளம் சேமமடுப் பகுதிகளில் ஆயுதப்படையினர் தீவிர தேடுதல் நடாத்தியதும், அப்போது 75 பேர் கைதுசெய்யப்பட்டதும் இவர்கள் ஆயுதப்படையினரால் கொலைசெய்யப்பட்டதாக அப்போது தகவல் வெளிவந்ததும் தெரிந்ததே.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடந்த ஒருவாரத்துக்கு முன்னர் வவனியா சென்று தமது உறவினரைத் தேடியபோது அவர்கள் அங்கு இல்லாததால் கிளிநொச்சிக்குச் சென்று தேடினார். அவர் சித்த சுவாதீனமான நிலையில் நடமாடியதைக்கண்ட உறவினர்கள் உடனடியாக

## அடகு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என ஒருமனதாகக் ...கரி மறியல் போராட்டம் ஆரம்பித்துள்ளமையாலும் போக்குவரத்து இடைஞ்சல் காரணமாகவும் பொதுமக்களின் நன்மை கருதி ஏற்கனவே அறிவித்தபடி கொழும்பில் நகைகள் வழங்கப்படமாட்டாது.

யாழ்ப்பாணத்தில் வைத்து நகைகளை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே மக்களின் நலன் கருதி மறியல் போராட்டத்தைக் கைவிடும் படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்'' என்றுமக்கள் வங்கி பிராந்தியமுகாமையாளர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## அந்த பத்து---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேத பரிசோதனைக்காக கடந்த நான்கு தினங்களாக கிளிநொச்சி பிரேத சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சடலங்களிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணமானவர்களின் உறவினர்கள் தினமும் வந்து ஆஸ்பத்திரியில் கூடி நின்று கண்ணீர் வடித்துச் செல்கின்றனர். இது குறித்து ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபையினரும் சுகாதாரப் பகுதியினர் மீது கண்டனம் தெரிவித்துளளனர்.

## பாகிஸ்தான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றும், ஆனாலும் இப்போது நடைபெறும் போட்டியை ரத்துச்செய்யப் போவதில்லை என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டியின காப்டன் இம்ரான்கான் தெரிவித்துள்ளார். [இ-து]

## பிரயாண ஒழுங்கு

ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எங்கள் முகவர் உங்களை அழைத்துச்செல்வார்

சவுதி அரேபியா, சிங்கப்பூர் (பெண்கள்)

ஆகிய நாடுகளில் உங்களுக்கு வருமானத்திற்கான ஒழுங்குகள் செய்துதரப்படும்.

இன்றும், நாளையும் தொடர்புகொள்ளவும்.

அத்துடன் பாஸ்போட் BOND, சகல நாடுகளுக்குமான விமான ரிக்கட்டுகளும் செய்துகொடுக்கப்படும்.

GROUP ATLANTIC TRAVELS (அடைக்கல மாதா கோவில் முன்பாக)
163, HOSPITAL ROAD, JAFFNA.
(A 383)

## ஆலய உற்சவம்

[யாழ்ப்பாணம்]

சுதுமலை சிவன்கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது, இம்மாதம் 22ம் திகதி வேட்டைத் திருவிழாவும், 23ம் திகதி சப்பறத்திருவிழாவும் 24ம் திகதி சுவாமி எழுந்தருளலும், 25ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

* * *

(பண்டத்தரிப்பு)

மாதகல் பாணுவெட்டி அருள் மிகு புவனேஸ்வரி அம்மன் ஆலயவருடாந்தமஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை யன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை தேர் உற்சவமும், மறு நாள் செவ்வாய்க்கிழமையும் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக கொண்டுசென்றுள்ளனர்

இவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து வவனியாவைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின்பேரில் கைதுசெய்யப்பட்ட மற்றவர்கள் உயிருடன் இருப்பதாகத் தெரியவந்துள்ளதாம். (ய-மா)

## காவலூர்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வாழும் கிராமங்கள் மீதான பீரங்கித் தாக்குதல் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள பருத்தியடைப்பு ஊர்காவற்றுறை கடைத்தெரு, கரம்பன், மெலிஞ்சிமுனை ஆகிய கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வெளியேறியுள்ளன

இக்குடும்பங்கள் மூன்று மைல்களுக்கப்பாலுள்ள சரவணை, வேலணை, நாரந்தனை ஆகிய கிராமங்களுக்குச் சென்றுள்ளன.

ஊர்காவற்றுறை நகர்பகுதி ஆளரவமற்ற நிலையில் இப்பொழுது வெறிச்சோடி காணப்படுகிறது.

கடற்படையினரின் தாக்குதலுக்கு போராளிகள் தரப்பிலிருந்து எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பீரங்கிக் குண்டுத் தாக்குதலுக்குள்ளான நால்வரில் ஒருவரான இந்திரா பாலச்சந்திரன் [21 வயது] என்னும் இளம் பெண் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றும் காயமடைந்தவர்கள் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியிலும், தனியார் வைத்திய சாலைகளிலும் சிகிச்சை பெறுகின்றனர். [மா]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திரு. சி. செல்லத்துரை (பண்டைதீவு)



தாமரம்: 10-08-1952

மறைவு: 15-02-1986

உற்றருக்கு உறுதுணையாயிருந்தாய், ஊரார்க்கு உத்தமனாயிருந்தாய், உற்ற நன்மனைவி மக்கட்கோ அனைத்துமாய் அள்ளித்தந்தாய் எங்கள் அன்புத் தெய்வமே. எம் குடும்பத்தில் ஒளிவிளக்காய் இருந்து எம்மை வாழவைத்த தெய்வமே மின்னாமல் முழங்காமல் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டுமறைந்தாயே.

இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நினைவில் என்றும் வாழும்
அன்பு மனைவி,
பிள்ளைகள், தாய்.
சகோதரர்கள் மற்றும்
[C 1301] உறவினர்கள்.

## வாசலில்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மதிக்க முற்பட்டபோது துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. வாசலில் நின்றவர் சூடுபட்டு விழுந்தார். தொடர்ந்தும் 10 நிமிடங்கள் சூட்டுச் சத்தம் கேட்டது நான் கதவைப் பூட்டிவிட்டேன் சூட்டுச்சத்தம் நின்றதும் திறந்து பார்த்தபோது இரத்தக்காயங்களுடன் கிடந்தார்.''

கொழும்புத்துறையைச் சேர்ந்த 15 வயதுச்சிறுவன் க. பாலமுருகனின் மரணவிசாரணையில் 'கிளாஸ்' தொழிற்சாலைப் பாதுகாவலர் ஆர். இராமச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

யாழ் மரணவிசாரணை அதிகாரி கணேசவன் நேற்றுக் காலை மரணவிசாரணை நடத்தினார்.

இராமச்சந்திரன் மேலும் கூறயதாவது; ''நான் காலை 5-45 மணிக்கு வேலைக்குச்சென்றேன் காலை 6-35 மணிக்கு பாலமுருகன் வந்து கதவைத் தட்டினார். சம்பவத்தின்பின்னர் இறந்ததனைத் தூக்கி வந்து வாங்கில் கிடத்திவிட்டுச் சக ஊழியர்க்கும் முதலாளிக்கும் அறிவித்தேன். முதலாளிவந்தபின்னர் சடலத்தை ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம்''

இறந்தவரின் தந்தை வி. கதிர்காமநாதன் சாட்சியமளிக்கையில்; தமது மகன் காலை 5-45 மணிக்கு வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டமரன்றும். அவர் தொழிற்சாலைக்கு நடந்து சென்றுரென்றும் தான் வீட்டிலிருக்கும்சமயது காலை 8மணியளவில் சம்பவப்பற்றி அறிந்ததாகவும் கூறினார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## பிற ஸ்தாபனங்களுக்கு-

(1-ம் பக்கத் ...)

போராட்டத்தில் தோள் கொடுத்துதவுமாறு பிறபொது ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

இந்த மறியல் போராட்டத்தை மேலும் விரிவுபடுத்தும்முகமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் சங்கச் செயற்குழு கூடி ஆராயவுள்ளது.

இக்கூட்டத்துக்கு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களையும் சமுகமளிக்குமாறு சங்கம் கேட்டுள்ளது.

மறியல் போராட்டம் சம்பந்தமாக சங்கம் பின்வரும் அறிக்கையொன்றைவிடுத்துள்ளது

''எமது சங்கத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய நேற்று முன்தினத்திலிருந்து வடபகுதியிலுள்ள சகல மக்கள்வங்கிக் கிளைகளின் முன்னும் வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மறியல் போராட்டமானது நகைகள் இங்கு வைத்துக் கையளிக்கப்படுமவரை மட்டும் என்பது யாவரும் அறிந்ததே மறு அறிவித்தல் வரும் வரை அலட்சியம் செய்யாமலும், சோர்வடையாதும சகல வாடிக்கையாளர்கள் போராட்டத்தில்கலந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.'' (யா)

## இலங்கை–பாகிஸ்தான் 2-வதுடெஸ்டில்
# இலங்கைக் கோஷ்டிக்கு வெற்றி நிச்சயம்!

(கொழும்பு)

இலங்கை - பாகிஸ்தான் கோஷ்டிகளிடையே, கொழும்பு சி. சி. சி. மைதானத்தில் நடைபெறும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இலங்கை வெற்றிபெறும் நிலையில் உள்ளது!

நேற்று மூன்றும் நாள் ஆட்டம் தொடங்கி மதியபோசன இடைவேளைக்கு முன் இலங்கைக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்பின்னர் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கோஷ்டி மதியபோசன இடைவேளையின் போது இரண்டு விக்கெட்டுகளை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இக் கோஷ்டி தேனீர் இடைவேளைக்கு 4 விக்கெட்டுகளை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கோஷ்டியின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரியத் தொடங்கிவிட்டது. போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் பிற்பகல் 4-05 நிறுத்தப்படும்போது, பாகிஸ்தான் கோஷ்டி 9 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரவி ரட்ணாயக்கா சிறப்பாகப் பந்துவீசி 5 விக்கெட்டுகளையும் அசந்த டி மெல் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

ஸ்கோர் விபரம்: இலங்கை: 273, பாகிஸ்தான்: 173, 154-9.

### சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் வீரர்கள்

பாகிஸ்தான் கோஷ்டி 2-வது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடும்போது, மதியபோசனத்தின்பின் ஒருகட்டத்தில் பந்து சேதமடைந்திருப்பதை இலங்கை பந்துவீச்சு வீரர் ரவி ரட்ணாயக்கா மத்தியஸ்தர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதை மத்தியஸ்தர்கள் ஏற்றுக்கொண்டு சேதமடைந்த பந்துக்குசமனான ஒரு பந்தைதெரிவுசெய்தனர் இதை பாகிஸ்தான் காப்டன் இம்ரான்கான் மைதானத்திற்குள் பிரவேசித்து கடுமையாக ஆட்சேபித்தார். இதனால் ஆட்டம் 20 நிமிடங்கள் தடைப்பட்டன.

இதன்பின் முன்னாள் காப்டன் ஜாவிட் மியண்டாட் துடுப்பெடுத்தாடும் போது, ஒரு கட்டத்தில் இலங்கை விக்கெட் காப்பாளர் கைடி அல்விசுடன் வாக்குவாதப்பட்டார். இதனாலும் ஆட்டம் சிலநிமிடங்கள் தடைப்பட்டன.

ஜாவிட் மியண்டாட் ஆட்டமிழந்து மைதானத்தைவிட்டு வெளியேறும்போது ரசிகர் கூட்டம் கூக்குரலிட்டது. இக்கட்டத்தில் மேற்படி வீரர் கடும் கோபத்துடன், ரசிகர்களுக்காகப் போடப்பட்டிருந்த தடைக் கம்பி வேலிக்குமேலால் பாய்ந்து, ரசிகர்களை துடுப்புமட்டையால் தாக்கமுற்பட்டார். உடனே பொலிஸார்தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். 'ரசிகர் கூட்டம் வீரர் ஜவிட் மியண்டாட்டுக்கு கற்களால் வீசியதால்தான், அவர் அவ்வாறு கோபப்பட்டதாக' பாகிஸ்தான் தரப்பில் கூறப்பட்டது இதனால் ஆட்டம் மீண்டும் 25 நிமிடங்கள் தாமதமடைந்தன.

நேற்று ஓய்வுநாள் ஆட்டம் மீண்டும் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். (வி)

---

## "சந்தோஷ வாழ்வளிப்பாள்"

சங்கரத்தை உறைதாயே
சங்கடங்கள் நீக்கிடம்மா
எங்கும் புகழிலங்குதேவி
எங்களை நீ காத்திடம்மா
மங்காப்புகழோடு செல்வம்
மகிழ்வெல்லாமளித்திடம்மா
சிங்கமிசையமருந்தேவி தாயே
சீற்றமிகு அரக்கர் செயலை அழித்திடம்மா

ஆடும் அரவின் கீழுறைவாள்
அவல வாழ்வு நீக்கிடுவாள்
பாடிப்பதம் பணியும் பக்தர்க்கெல்லாம்
பரமபதம் அருள்வாள் பத்திரகாளி
கேடுமிகு நெஞ்சர்கேண்மையெல்லாம்
ஓடி ஒழித்திடச்செய்வாள்.
சாடிடும் வினைகள் யாவும் நீக்கி
சந்தோஷ வாழ்வளிப்பாள்.

சி. சபாநாதன்

✶ சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் கோயில் கொடியேற்றம் கடந்த 16ம் திகதி இடம்பெற்றது.

---

## "நாவலர் இயக்கத்தை ஊக்குவித்த தவமுனிவர்"



(யாழ்ப்பாணம்)

"நாவலர் பெருமானின் மரபுவழிச் சூழலில் வளர்ந்து, அவரைப் போலவே தம் வாழ்வையும் அர்ப்பணித்து, தமிழும் சைவமும் தழைத்து வளர அயராதுழைத்தவர் பண்டிதமணி அவர்கள். தமிழ்மொழி, சைவ சித்தாந்தம், இலக்கியம், கலாசாரம், நாவலரியல் முதலியவற்றின் ஏற்றத்திற்கும் எழுச்சிக்கும் முழுமூச்சுடன் தமது எழுத்தாலும், பேச்சாற்றலாலும் வலிவும் பொலிவும் ஊட்டியவர். நாவலர் இயக்கம் புதிய பரிமாணத்தையும் வீச்சையும் பெற்றுப் பேரியக்கமாக முகிழ்த்தபோதெல்லாம் அவற்றை வரவேற்றுத் தட்டிக் கொடுத்து ஊக்கமூட்டிய தவமுனிவரான அவரின் மறைவு நாவலரியக்கத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்"

இவ்வாறு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவையொட்டி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வெளியிட்டுள்ள இரங்கச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### யாழ். இலக்கிய வட்டம் அனுதாபம்

"தமிழர்தம் முதுசொமான எமது பண்டிதமணி ஐயாவை நாம்இழந்துவிட்டோம் அவர் மறைவு ஒரு சகாப்தத்தின் மறைவு"

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டம் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

### புராணசபை ஆஞ்சலி

'நாவலர் பெருமானின் வழி நின்று புராண படனத்தைப் போற்றிப் பாதுகாத்த பெருமை பண்டிதமணியின் சிறப்புக்களில் தனித்துவமானது' என்று நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனபுராணசபையினரின் அஞ்சலியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### கருத்தரங்கு

[அராலி]

கால்நடை வளர்ப்போருக்கான கருத்தரங்கு ஒன்று அராலி வடக்குப் பாரதி சன சமூகநிலைய மண்டபத்தில் இப மாதம் 22ம் திகதி சனிக்கிழமைபிற்பகல் நடைபெறும் கால்நடை செயற்கைமுறை சினைப்படுத்தும் நிலைய அதிகாரி திரு ந. விவேகானந்தன் கலந்துகொண்டு சினைப் படுத்தும்முறைபற்றி உரையாற்றுவார்.

---

## "அமரர் கிருபாகரன் சட்டத்துக்கு மதிப்பளித்தவர்"
### இரங்கலுரையில் பலர் அஞ்சலி

(வேலணை)

"வேலணை ஆரம்பநீதிமன்ற நீதிபதியாக பல ஆண்டுகாலம் கடமையாற்றிய அமரர் ஐயாத்துரை கிருபாகரன் நான் ஒரு நீதிபதி என்ற அங்கீகாரம் இன்றி சட்டத்திற்கு மதிப்பளித்து அதன்படிநடந்து வந்தவர். அவர் அமைதியான சுபாவம் படைத்தவர். எல்லோருடனும் மிகவும் பண்பாக பழகுபவர், குழந்தை உள்ளம் படைத்த அமரர் கிருபாகரன் புலோலி என்னும் கிராமத்தில் பிறந்து தனது இறுதி நேரத்தில் வேலணையில் வாழ்ந்து வேலணை மண்ணிலேயே சங்கமமாகி விட்டார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இம்மண்ணிலேயே நடைபெறுவதினால் வேலணை பெருமையடைகின்றது"

இவ்வாறு வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றி யாழ். அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற சம்பவமொன்றில் துப்பாக்கித் துண்டுகளுக்கு இலக்காகி அகாலமரணமடைந்த திரு ஐயாத்துரை கிருபாகரனின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு இரங்கல்உரையாற்றிய தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவு பிரஜைகள் குழுத்தலைவர் திரு சிவசிதம்பரப்பிள்ளை இராசரெத்தினம் கூறினார்.

சட்டத்தரணி தி. ப. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விரங்கல் கூட்டத்தில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றநீதிபதி விக்கினேஸ்வரன் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறியதாவது:

"அமரரான ஐ. கிருபாகரன் எமது சகோதரன் உறவில் மட்டுமல்ல, தொழிலும் சகோதரன் என்னிடம் அடிக்கடி வந்து நீதித்துறை சம்பந்தமாக கருத்துபரிமாறிக்கொள்வார் அமரர் ஒரு நீதியானதாரகை. ஒருபக்கமும் சாராது நடுநிலைமையில்நின்று நீதியைச் செலுத்துபவர். இப்படிப்பட்ட ஒருவரை நாம் இன்று இழந்துள்ளோம். இவருக்கு எமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி அவரது ஆன்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்" என்றார்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு பி. பாலவடிவேல் தனது இரங்கல் உரையில்: "நாங்கள் இருவரும் தொழில் ஆற்றியிருக்கின்றோம், மிகவும் திறமைவாய்ந்த ஒரு பண்பாளர், நீதிபதிகள் எவ்வாறு வாழவேண்டுமோ அவ்வாறு வாழ்ந்துகாட்டி மக்களிடம் நன்மதிப்பையும் பெற்றவர்" என்றார்.

சட்டத்தரணி திரு. ஏகநாதன் தனது இரங்கலுரையில்: "அமரர் ஐ கிருபாகரன் சுகவீனம் அடைந்த நிலையிலும் கூட நீதிமன்றத்திற்கு தவறாது வருகைதந்து தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நீதியை செலுத்தியுள்ளார். நீதித்துறையில் எதிரியானாலும் சரி, வழக்காளியானாலும் சரி ஒரே கண்ணோட்டத்தில் நீதிவழங்கி நீதியை நிறுத்திய பெருந்தகை" என்றார்.

இந் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய சட்டத்தரணி கதிரவேலு தமது உரையில்: "அமரத்துவம் அடைந்த பெருந்தகை ஒரு கண்ணியமானவர். அவரது அகாலமரணம் சட்டத்தரணிகளான எங்களுக்கும் நீதிபதிகளுக்கும் மாபெரும் இழப்பாகும். அவரது மன்றில் சட்டத்தரணிகள் யாபேரும் வேறுபாடுகள் இன்றி அவரால் கணிக்கப்பட்டார்கள், எந்த வழக்கை எடுத்தாலும் அதைமிக ஆராய்ந்து சீர்தூக்கி நீதி செலுத்தக்கூடியவர்" என்றார்.

சட்டத்தரணி திருமதி சரோஜினி இளங்கோவன் தமது இரங்கல் உரையில்: "நீதிபதிகள் எவ்வாறுவாழவேண்டுமோ அவ்வாறு வாழ்ந்துகாட்டிய நற்பண்பாளர். இவருடன் சட்டத்தரணிகளாகிய நாம் கடமையாற்றும் போதுமிகவும் சுலபமாக கடமையாற்றுவோம். இவரது இழப்பு நீதித்துறைக்கு மட்டுமல்ல வேலணை மக்களுக்கும் பேரிழப்பாகும்" என்றார்

இறுதிக்கிரியையில் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின் முன்னாள் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். மாநகர சபை முன்னாள் மேயர்களான திருவாளர்கள் இரா ஜா விசுவநாதன், திரு எஸ். நாகராசா சாவகச்சேரி நீதவான் வி பி. சுந்தரலிங்கம், யாழ். மேல்நீதிமன்ற முன்னாள் பதிவாளர் எஸ். பரமநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

---

### புதுவருட நிர்வாகிகள்

(உடுவில்)

உடுவில் கிறிஸ்தவ வாலிபர் கழகத்தின் (வை எம் சீ ஏ) வருடாந்த பொதுக்கூட்டம் உடுவில் திருச்சபை மண்டபத்தில் வண டி சி இரட்ணசிங்கத்தின் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் இவ்வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு.எஸ். குமாரசுவாமி. உபதலைவர் திரு எல். எஸ் சீ கனகசிங்கம். இணைச் செயலாளர்கள் திரு.பிரின்ஸ் இரட்ணம், திரு எஸ். சுரேஸ் பொருளாளர் திரு. எம். சற்குணம், மற்றும் எட்டுப் பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---


# LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் சுண்ணாம்புக்கல்
காங்கேசன்துறையில் உள்ள எமது கற்குழியில் உடைத்து எடுப்பதற்கானதும்
அவற்றை 2 கி மீ தூரத்தில் உள்ள எமது கல் நொருக்கி
இயந்திரத்திற்கு எடுத்துச் செல்வதற்குமான

## அழைப்பு:

நாள் ஒன்றுக்கு 3000 தொன் சுண்ணாம்புக் கற்களை காங்கேசன்துறையில் உள்ள எமது கற்குழியில் இருந்து பாரிய இயந்திரங்கள் மூலம் உடைத்து கனரக வாகனங்களில் ஏற்றி 2 கி மீ தூரத்திலுள்ள எமது கல்நொருக்கி இயந்திரத்திற்கு காலை 7-00 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் இடையில் இறக்குதல்.

கற்களை உடைப்பதற்கும் அவற்றை அள்ளி கனரக வாகனங்களில் ஏற்றுவதற்குமான பாரிய வாகனங்களை வேலைக்கு அமர்த்தக்கூடிய கைதேர்ந்த ஸ்தாபனங்கள் அல்லது ஒப்பந்தகாரர்கள் மேற்படி விடயமாக நீண்டகால ஒப்பந்தத்தை செய்வதற்கு வேண்டிய தொழில்நுட்ப மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு எமது தொழிற்சாலை முகாமையாளரை அவரது காரியாலயத்திலோ அல்லது பொதுமுகாமையாளரை 251, தர்மபால மாவத்தை, கொழும்பு 7ல் உள்ள லங்கா சீமென்ற் லிமிட்டெட் காரியாலயத்திலோ காரியாலய நேரத்தில் சந்திக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

பொதுமுகாமையாளர்,

# லங்கா சீமெந்து லிமிட்டெட்
காங்கேசன்துறை.

(A 360)

# 'பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபரின் திறமையே அத்திவாரம்''

## விளையாட்டுப் போட்டியில் கல்வி அதிகாரி

(உடுவில்)

''ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் முக்கிய பங்கேற்பவர் அதன் அதிபரே. அவரின் நிர்வாகத் திறமையே வளர்ச்சிக்கு அத்திபாரம். இப் பாடசாலைக்கு, இந்த அதிபர் வந்தகாலத்தின்பின்னரே பாடசாலையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காணக்கூடியதாக இருக்கின்றது. அவரது உழைப்புக்கு பெற்றோர் மாணவர், நலன் விரும்பிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்குவது அவசியம்''

இவ்வாறு மானிப்பாய் வட்டார கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன், மானிப்பாய் அட்டகிரி சைவ வித்தியாசாலையின் விளையாட்டு போட்டிகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. இ வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இப் போட்டிகளுக்கு உடற்கல்வி வட்டார கல்விஅதிகாரி திரு வி கணேசலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

அவர் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி உரையாற்றுகையில் ''சிறிய பாடசாலையாக இருப்பினும் பெரிய பாடசாலைகளுடன் போட்டியிடும் அளவுக்கு விளையாட்டுத் திறமைமிக்க மாணவர்களைகொண்டிருக்கும் இப் பாடசாலை, வட்டார, மாவட்டப் போட்டிகளில் பங்குகொண்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்'' என்றார்

# "கல்வித்துறை முன்னேற்றம் மாணவ, ஆசிரியர் உறவில் உள்ளது"

## கல்விப்பணிப்பாளர் கருத்து

(கிளிநொச்சி)

இலங்கையில் உள்ள கொத்தணிப் பாடசாலைகளில் கிளிநொச்சி கொத்தணிப்பாடசாலை முன்னணி வகிக்கின்றது. என்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாணவர் கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலை அதிபர் இரா. சின்னத்தம்பி கூறினார்

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம் எம் மன்சூர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இக்கருத்தரங்கில் பேசுகையில்: ''மாணவர்கள் ஆசிரியர்களின் நல்லுறவின் மூலம் தான் கல்வித்துறையில் நாம் முன்னேற்றம் காணமுடியும். கிளிநொச்சி மாவட்டம் கல்வித்துறையில் நல்ல முன்னேற்றத்தை காணவேண்டும். இதற்கு எல்லோரது ஆதாவும் தேவை என்றார்

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்டத் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திருமதி பவானி ஸ்ரீஸ்சந்தராசா, தலைமைத்துவத்தின் சிறப்பைப்பற்றி உரையாற்றினர்.

வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் எஸ். ஏ. சி எம். இஹனா, அக்கராயன் குளக் கொததணி பாடசாலை அதிபர் ஏ கே. இராசேந்திரம், கொத்தணிச் செயலாளர் பொன் தில்லைநாயகம் மததிய கல்லூரி அதிபர் ஏ கே. குணசிங்கராசா முதலானோரும் இக்கருத்தரங்கில் உரையாற்றினார்கள்.

## 'செய்திச்சுடர்'

மாசிகை

''பூர்ஷுவா சமூக அமைப்பில் கட்சி முறையானது ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றது இந்த விதி விலக்கில் இன்று இலங்கை அரசியல் மாத்திரம் ஒதுங்கி விடமுடியாது. என்பதை எமக்கு தெளிவுபடுத்துவது தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் போக்குகளும் நடவடிக்கைகளாகும்''

இந்த உண்மையினை முதல் பக்கச் செய்தியாகக்கொண்டு வெளிவந்திருப்பதுதான் செய்திச்சுடர் என்னும் சஞ்சிகையாகும்.

மல்லிகை, தாயகம், களணி அஞ்சலி, மாற்று ஆகிய சஞ்சிகைளின் வரிசையில் தமிழமுது, தாரணி ஆகிய இலக்கிய ஏடுகளுக்கும் ஈழத்து இலக்கியம் என்னும் கோபுரத்தில் தனியான தோர் இடமுண்டு இந்த இரு இதழ்களும் கால ஓட்டத்தில் எதிர்நீச்சல் போட முடியாது ஸ்தம்பித்து விட்டனவாயினும் அவைகளை வெளிக்கொணர்ந்தவர்களின் புதியதோர் முயற்சியே இன்று உதித்திருக்கும் செய்திச்சடர் என்னும் இதழாகும்.

அரசியல் விமர்சனப்போக்கில் இலங்கை இந்திய உறவுகள் பிரச்னையில் ஒரு முக்கியத் திருப்டம், அமெரிக்கா உலகின் போக்குக்கு புறம்பாகி வருகிறதா? போன்றக் கட்டுரைகளுடன் முன்னோடி எழுத்தாளர் அமரர் செ. கதிர்காமநாதனைப்பற்றி இதயம் பேசுவது வரவேற்கத்தக்கது

புவியியல் அடிப்படையில் யாழ்ப்பாணக்குடநாடு இலங்கைத்தீவின் ஓர் அங்கம். இந்த அங்கத்தில் ஓடுகின்ற இரத்த வெள்ளம் நாளாந்தம் நடக்கும் சகிக்க முடியாத அவலம். இந்த அவலத்துக்கான கதாநாயகர்களின் . அறிமுகமாக 'இலங்கையில் இரத்தம் சிந்துகிறது என்னும் கட்டுரை அமைந்துள்ளது, நல்ல பல தகவல்களைத் தந்துள்ள இக் கட்டுரையும் 'அம்பலம்' பகுதியானது. அறியாதது மட்டுமன்றி மறைந்து கிடக்கும் சில உண்மைகளையும் அம்பலத்துக்கு இழுத்துள்ளது.

குறைவானப் பக்கங்களுடன் நிறைவான விடயங்களுடன் வெளிவந்துள்ள 'செய்திச்சுடர்' ஈழத்தில் தனக்கென தனியானதோர் இடத்தைப் பிடித்துக்கொள்ளும் என்பதற்கு அதன்முதலாவது இதழ் நல்லதோர் சான்றாக அமைந்துள்ளது.

இரா. சாந்தி

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக்கழக புது வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. செல்லையா, செயலாளர்: திரு. இ. இரத்தினவேல், தனாதிகாரி: திருமதி வே. இந்திராணி. ஆறு பேர் கொண்ட ஆலோசனைக்குழுவும் அமைக்கப்பட்டது.

## அகதிகளுக்கு வீடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சங்கிலியன் புனர்வாழ்வுக்கழகத்தின் அகதிமுகாமில் தங்கியுள்ள எண்பத்தைந்து குடும்பங்களுக்கு கைதடியில் வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

கைதடியில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான இருபது ஏக்கர் காணியிலேயே இவ் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என சங்கிலியன் புனர்வாழ்வுக்கழக முகாமையாளர் டாக்டர் ப. சசிதரன் தெரிவிக்கின்றார். [ஐ]

# இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 5(1986-3-18)
கிழமை- செவ்வாய்
திதி- ஸப்தமி காலை 7 33ன் மேல் அட்டமி
நட்சத்திரம்- மிருகசீரிடம் பி. இ வரை

மேடம்: கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம். அவசரப் போக்கையும் அதிதீவிர உணர்ச்சியையும் தவிர்க்கவும்.

இடபம்; உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள் தொழில் துறையில் முன்னேற்றம்காணப்படும். வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தியும் கிடைக்கும்.

மிதுனம்; முன்னேற்றப் பாதையில் தடைகள் தென்படுகின்றன. தொழில்புரியுமிடத்தில் தொல்லைகள் உருவாகும் சகோதரவழியால் சஞ்சலத்திற்குமிடமுண்டு.

கடகம்: சகலதுறைகளிலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். கல்வியில் முன்னேற்றமுண்டு.

சிங்கம், புதியபாதையொன்று உங்களை எதிர்நோக்கியுள்ளது நீண்டகாலப்பிணி நிவர்த்தியாகலாம். புத்திரரால் மனதிற்குத் திருப்தியேற்படும்.

கன்னி: வேவுகணைகள் தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாவீர்கள். அபாயகரமான தொழிலில் நிதானமாக ஈடுபடவும்,

துலாம்: வேண்டிய ஒருவரை பகைத்துக்கொள்ள நேரும். அவசரபோக்கு ஆபத்தைத்தரும். சகதொழிலாளர்களினால் சஞ்சலத்திற்கிடமுண்டு.

விருச்சிகம்; இனிமையின் அழைப்பு இன்று உங்களை அழைக்கலாம் இல்லம் பல்கலைக்கழகமாக மாறும். களஸ்திரவழியால் கண்ணியம் சேரும்.

தனுசு: கயவர்கள் கண் துடைப்பு வேலைகளில் ஈடுபடுவர். கடமையும் தவறலாம். ஆயுத பீடை, விழுந்துநோக்காடுண்டு. நிதான புத்தியுடன் செயலாற்றவும்.

மகரம்: இறைவழிபாடு மேலிடும் இதயத்தில் அமைதியும் ஏற்படும், முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்குதவுவர்.

கும்பம்: பொருளாதாரத் துறையில் நல்லமுன்னேற்றம் காணப்படும். கொடுக்கல் வாங்கல்மூலம் அதிகலாபமடைவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும்

மீனம்: காத்திருக்கும் பகைவர் கால் இடறக்கூடும். பொருள் வரும் வழியேற்படும். கெடுபிடி எதிரியும் பணிவர். எதிலும் ஆத்திரப்படாமலிருப்பது நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

## தும்பளையில் கந்தபுராணப் படிப்பு

(புலோலி)

தும்பளை நெல்லண்டை அம்பாள் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது மூன்றுமாதகாலம் நடைபெறவுள்ள இக்கந்தபுராணப்படிப்பு கடந்த தைமாதம் தைப்பூசத் தினத்தில் ஆரம்பமானது

இம்மாதம் 23ம்திகதி சுவாமி திருமணமும், 23ம் திகதி வள்ளி திருமணமும் நடைபெறுவதுடன் புராணப்படிப்பு பூர்த்தியடையும். 27 ம் திகதி அன்னதானமும் 28 ம் திகதி நிறைமணிப் பூசையும் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இப்படியும் நடக்கிறது



பக்கத்தில்காணப்படுவது ஒரு அட்டைப்படம்.

ஒரு கை. கையில் காணப்படுவது ஒரு பொருள். அந்தப் பொருள்?

இம்மாத ஆரம்பத்தில் கொழும்பு சரவணமுத்து (சரா) விளையாட்டரங்கில் சென். தோமஸ் றோயல் நூற்றுஏழாவது கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதனைக் கௌரவிக்குமுகமாக கிரிக்கெட்மலர் ஒன்று வெளிபிடப்பட்டது அந்த மலரின் அட்டைப் படத்தைத்தான்இங்கு பார்க்கிறீர்கள்.

அது சரி......அந்த மலர், கிரிக்கெட் போட்டி சம்பந்தமானது. அப்படியானால் படத்தில் காணப்படும் கையில் இருக்கவேண்டியது கிரிக்கெட் பந்து. ஆனால் இருப்பதோ 'கிறீனேட்' மாதிரி இருக்கிறதே!

றோயல் கல்லூரியிலும் சென் தோமஸிலும் கல்வி கற்ற பலர் பெரும் பிரமுகர்களாக இருந்திருக்கிறார்கள். இருக்கிறார்கள் என்பது ஓர் இரகசியமல்ல. இன்றைய ஜனாதிபதி, எதிர்க்கட்சித்தலைவர்கள் எல்லாம் றோயல்தான். இது போல தந்தை செல்வா, அமரர் திருச்செல்வம் ஆகியோர் படித்தது சென்.தோமஸ்.

அது சரி......அட்டைப்படத்தில் காணப்படும் 'பந்தி'ன் கதை—பின்னணி என்ன?

—-ஊடுருவி

# கிழக்கில் தொடரும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உயிருக்கும் அச்சுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளையில் வெற்றிகரமான ஒருஅமைதியானதீர்வை ஏற்படுத்திக் கொடுப்பதில், உண்மையிலேயே இந்திய அரசு கண்ணை மூடிக்கொண்டிருப்பதாகவே புலப்படுகின்றது. கொழும்பிலுள்ள இந்தில்த்தூதுவராலயம் சரியான விபரங்களை இந்தியாவுக்கு அனுப்பிவரும்போதிலும், இந்தியா 'தாமதித்தல், பார்த்தல்' விளையாட்டையே மேற்கொண்டுவருகிறது. இராஜீய வட்டாரங்களின் கருத்துப்படி, இந்திய உயர் ஸ்தானிகர் திரு.ஜெ. என். டிக்ஸிட்டும் இந்தியாவின் போக்கு குறித்து விரக்தி நிலையடைகிறார் என்பதேயாகும்.

இலங்கையின் இராஜீய வட்டாரங்கள் இனப்பிரச்னைக்கான உடன்படிக்கைகளைக் கூட்டிக்கொண்டு வருவதை இந்தியா கண்மூடி அவதானிக்கிறது.

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி பெப்ரவரி முற்பகுதியில் இலங்கைவந்தபோது, திரு. ஜெயவர்த்தனாவினால் கையளிக்கப்பட்ட 57 பக்கங்களைக் கொண்ட நகல்திட்ட அறிக்கையில், தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த மூன்று முக்கிய ஆலோசனைகளுல் ஒன்றேனும் இணக்கம்காணப் பட்டிருக்கவில்லை

அதே நேரத்தில் இலங்கை அரசு இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வே சிறந்த பரிகாரமென்று சிங்கள மக்களுக்கு கூறுவதன்மூலம் அவர்கள மத்தியில் தனது ஆதரவைப் பலப்படுத்தி வந்துள்ளது. பௌத்த மதகுருமார், எதிர்க்கட்சியினர், கண்டி அஸ்கிரியபீட மஹாநாயக்க தேரோக்கள் 'இந்தியா ருடே' சஞ்சிகைக்களித்த பேட்டியில் 'தமிழர்களின் கோரிக்கைகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவை,' என்று கூறியுள்ளார்கள்.

இவ் விடயம் குறித்து அவர்கள் மேலும் கருத்து வெளியிடுகையில், ''தமிழ்மக்கள் வடக்குக்கிழக்கை ஒன்றாக இணைத்து நாட்டின்மூன்றில்இரண்டு பகுதியை கொண்ட தனி இராச்சியம் அமைக்க முயற்சிக்கிறார்கள் அவர்களது சொந்தப் பொலிஸ் படைகளுடன் அதாவது அவர்கள் எம்முடன் ஒரு யுத்தம் ஒன்றைத்தொடுக்கவே உள்ளார்கள்'' என்றனர். எதிர்க்கட்சித்தலைவர் அநுரா பண்டாரநாயக்காவின் கருத்து, 'இராணுவத் தீர்வே பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும்' என்பதாகும்

தேசியபந்தோபஸ்து அமைச்ச திரு. லலித்அத்துலத்முதலி அப்பாவிப்பொதுமக்கள்கொல்லப்படுவதை தொடர்ந்து மறுத்தே வருகிறார். இருதயபுரச் சம்பவத்தின்போது பலியானவர்கள் குறித்து திரு. லலித்அத்துலத்முதலி கூறுகையில் திரு லலித் அத்துலத்முதலி கூறுகையில், ''உங்களுக்கு எப்படித்தெரியும் அவர்கள் அப்பாவி மக்கள் என்று?'' எனக்கேள்வி எழுப்புகிறார். இருதயபுரத்தில் பலியானவர்களனைவரும் பயங்கரவாதிகள் என்பதே அவரது கருத்து.

இலங்கை அரசு இனப்பிரச்னையை, ஒரு இராணுவப்பிரச்னையாகக்கருதி அதன்முலமே அதைத்தீர்க்கலாம் என்ற தனது கொள்கையில் உறுதியாகவுள்ளது அதேநேரத்தின் போராளிகளும் 'தாங்கள் ஆயுதச் சண்டை' மூலம் வெற்றியடையலாம் என்று கருதுகிறார்கள். இரண்டு பக்கமும் விட்டுக்கொடுக்காத தன்மையே காணப்படுகிறது.

இலங்கை அரசு இனப்பிரச்னை விடயத்தில்காலத்தை வீணடிப்பதன் நோக்கத்தை இந்தியா தற்போதே உணர்ந்துள்ளது.

எதிர்காலத்தில் இலங்கை அரசுடன் எப்படியான உறவுகளை வைத்துக்கொள்ளலாம் என்பது பற்றிய தீவிர ஆலோசனைகளை மேற்கத்தேய நாடுகள் தற்போது ஆரம்பித்துள்ளன

இனப்பிரச்னை விடயத்தில் இலங்கை அரசுடன் இந்தியா கடுமையான போக்கையே கடைப்பிடித்தாக வேண்டும்.

தொகுப்பு:-
ஆர். பிரபா

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# மறியல்போராட்டம்; மக்கள்வங்கி இயங்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுளள மக்கள்வங்கி பிரதான காரியாலயத்திற்கு முன்பாகவும் கிளைகளுக்கு முன்பாகவும் அடகு வைத்தவர்கள் மறியல் செய்ததினால வங்கிகள் நேற்று திறக்கப்படவில்லை.

யாழ். பிரதானவீதியிலுள்ள பிரதான காரியாலயம் மற்றும் நகரிலுள்ளகிளைகளிலும்நேற்று மறியல் போராட்டம் நடைபெற்றது.

காலை 7 மணிக்கே சில கிளைகளுக்கு முன்னுள், அடகுவைத்தோர் கூட ஆரம்பித்துவிட்டனர்.

காலை 8-30 மணியளவில் வங்கி ஊழியர்கள் வந்தபோது வாசலில் மறியல் இருந்தவர்கள் அவர்களை உள்ளே செல்ல விடாமல் தடுத்தனர். இதனால் ஊழியர்கள் திரும்பிச் சென்றனர்.

ஸ்ரான்லிவீதி, பிரதானவீதி கிளைகளில் கூடுதலான பெண்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க)

# நாளை ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

மீன்பிடித்தடையை எதிர்த்து நாளை புதன்கிழமை 19ம் திகதி யாழ்நகரில் கடற்றொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற விருக்கிறது.

யாழ்ப்பாணம் பெரியகோவிலிலிருந்து நாளைகாலை 10 மணிக்கு புறப்படும் இந்த ஊர்வலத்தை வடபகுதி கடற்றொழிலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை பகுதி கடற்றொழிலாளர்களின் ஊர்வலங்கள் அவ்வப்பகுதிகளில் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகி பேராலயத்தையடையும். வெளியூர் கடற்றொழிலாளர் காலை 10 மணிக்கு ஊர்வலத்தில் அங்கு கலந்துகொள்வார்கள்.

# போராளிகளுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

தொண்டமானாறிலும், கிளிநொச்சியிலும் இடம்பெற்ற சம்பவங்களின்போது மரணமான தமது இயக்கத்தைச் சேர்ந்த இரு போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அஞ்சலி செலுத்திச் சுவரொட்டிகள் வெளியிட்டுள்ளனர்.

அச்சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

''கடந்த 16-ம் திகதி தொண்டமானாறு இராணுவத்தின் மீது தாக்குதல் நடாத்துவதற்கான நடவடிகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் தன் உயிரை மாய்த்த சங்கர் (சந்திர கசரி - தம்பசிட்டி) என்பவருக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்,

''அதே தினம் கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்குஅருகே எயாசன் றேட்டில எமதுவீரர்கள் நடந்துவந்தபோது சைக்கிளில் வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எமது வீரர் பரன்(தர்மலிங்கம்-தண்ணீரூற்று, முள்ளியவளை) வீரமரணம அடைந்தார் அவருக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்,'' [மப]

# புலோலியில் ரூ. 6 லட்சம் கொள்ளை!

(புலோலி)

புலோலியில் உள்ள வீடு ஒன்றில் நள்ளிரவு வேளையில் நுழைந்த இனந்தெரியாத கோஷ்டியொன்று நித்திரையிலிருந்த வீட்டுரிமையாளர்களை எழுப்பி, வீட்டுத்தலைவரையும், மனைவியையும் தாக்கியதுடன் ரொக்கப்பணம், நகைகள், பொருட்கள் உட்பட சுமார் ஆறு லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளது!

புலோலி-தெற்கு உபயகதிர்காமத்தில் வசிக்கும் பருத்தித்துறை வர்த்தகர் கு. சுந்தரேஸ்வரன் என்பவரது வீட்டிலேயே இப்பயங்கரக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

இப்பயங்கரக் கொள்ளைச்சம்பவத்தையடுத்து, புலோலிப் பகுதி மக்கள் கொள்ளையைக் கண்டித்துப் புலோலிப் பகுதியில் வீதித்தடைகளைப்போட்டு வாகனங்கள் எதையும் நடமாட முடியாமல் செய்தனர்.

இதனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை பருத்தித்துறைச்சாலை பஸ்சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டன பருத்தித்துறை மினிவான் சேவைகள் மந்திகை மடத்தடியிலிருந்தே ஆரம்பித்தன.

மேற்படிகொள்ளைச்சம்பவத்தில் சுமார் இருபது பேர்பயங்கர ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பரந்தன் ரயில் விபத்து: திருத்த வேலைகள் மும்முரம்

(கே. வி. கே. திருலோகமூர்த்தி)

பரந்தனில்இடம்பெற்றரயில் விபத்தில் சேதமடைந்த ரயில் பெட்டிகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் புகையிரதப் பகுதியினர் தொடர்ந்து மூன்று தினங்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம், அநுராதபுரம் முதலான பகுதிகளில் உள்ள புகையிரதப்பகுதி ஊழியர்கள் திருத்த வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

பாரிய 'கிரேன்'கள் பயன்படுத்தப்படுகின்றன. நான்கு ரயில் பெட்டிகள் இவ்விபத்தில் சேதத்திற்குள்ளாகிய துடன் ரயில் பாதையிலுள்ள பாலம் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

## ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

பரந்தன் ரயில் விபத்தில் காயமடைந்தவர்களில் மேலும் 4 பேர் யாழ். ஆஸ்பத்திரியல் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

ஏற்கனவே காயமடைந்த 16 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் நாலவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (க)

# மரண அறிவித்தல்

## A. S. இரத்தினம்

பலாலி வீதி, சோண்டாவில் கிழக்கு வாசியும், (முன்னைநாள் Akuressa, Jaffna Stores, உரிமையாளரும், பிரபல வர்த்தகருமான) A. S. இரத்தினம் அவர்கள் தனது 74-வது வயதில் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், சுந்தரலிங்கம் (பட்டினசபை, உரும்பராய்), திருமதி யோகராணி சிவலிங்கம், திருமதி புஸ்ப்பராணி யோகலிங்கம் (Ratnams, Palaly Road' Kondavil), சண்முகலிங்கம் (லண்டன்), திருமதி கமலராணி, திருமதி புவனராணி, ஆனந்தராசா (ஜேர்மனி), திருமதி ஜெயலட்சுமி இரத்தினசோதி (கனடா), ஜெயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனும், ஆனந்தமூர்த்தி (மாநகரசபை மட்டக்களப்பு), நடராசா (விவசாயத் திணைக்களம், முல்லைத்தீவு), திருவருட்சோதி (புகையிரதத் திணைக்களம், இரத்மலானை), பாலகுமார், கந்தசாமி (பாரெய்ன்), திருமதிகள் சுசீலாதேவி, குணவதி, மனோகரி ஆகியோரின் அன்பு மாமனரும், காலஞ்சென்ற தம்பையா (மலேசியா), திருமதி கனகரத்தினம் (மலேசியா), காலஞ்சென்ற அ பொ. தம்பித்துரை, காலஞ்சென்ற திருமதி இராமநாதன், A. P. இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 18-3-86 (இன்று) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு கோண்டாவில், பலாலி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கிழக்கு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: இ. சுந்தரலிங்கம்

[C 1294]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

# மரண அறிவித்தல்

## செல்வி பாமிஜா இராசையா

கைதடிகிழக்கு இராசையா [லிகிதர், யாழ் கச்சேரி) விக்னேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும், கிரிஜா, கிரிதரன், இந்துஜா ஆகியோரின் சகோதரியுமான பாமிஜா அகாலமரணமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று பிற்பகல் 1 மணியளவில் கைதடி ஊற்றலடி மயானத்தில் நடைபெறும்.

[C1307]

## செல்வி பூபதி சங்கரப்பிள்ளை

செல்வி பூபதி சங்கரப்பிள்ளை காலமானார். (முன்னாள் சிரேஷ்ட தாதி, கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய்) அன்னார் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சங்கரப்பிள்ளையினதும், திருமதி சங்கரப்பிள்ளையினதும் அன்பு மகளும், திருமதி கோவிலாட்சி பொன்னுத்துரை, சட்டத்தரணி திரு. ச. கனகரத்தினம், நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்தைச்சேர்ந்த கோடீஸ்வரி சங்கரப்பிள்ளை, நாகரத்தினம் சங்கரப்பிள்ளை (அதிபர்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற திரு. பொன்னுத்துரையினதும், திருமதி புவனேஸ்வரி கனகரத்தினத்தினதும் மைத்துனியும் கமலாதேவி சிவலிங்கம், நிர்மலாதேவி ஆகியோரின்சிற்றன்னையும், சுமித்திராவின் அன்புப் பேத்தியுமவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (18-3-86) பி. ப. 2-00 மணி வரையில் தச்சன்காடு மயானத்தில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

[C 1305]

## கணபதிப்பிள்ளை நடராசா - வேலணை

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வேலணையை வசிப்பிடமாகக் கொண்டவருமான உள்ளூராட்சிமன்ற ஓய்வுபெற்ற இலிகிதர் கணபதிப்பிள்ளை நடராசா காலமாகிவிட்டார். இவர் கரம்பொன் கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், விருத்தாசலத்தின் அன்புக் கணவரும், தேவரஞ்சிதம், வாசுகி, இளமுருகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜசிங்கம்) வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம்) பரஞ்சோதிநாதன் - உரிமையாளர், நிக்காடோ ஏஜென்சி ஆகியோரின் அன்பு மாமனும், வேலணை பிரபல வர்த்தகர் சிற்றம்பலம் (முருகா) லெட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், சரவணபவன் V J S. குறூப் உரிமையாளர், அமரேசன் செங்குந்தா இந்துக கல்லூரி, வவனியா பிரபல வர்த்தகர் விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கூட்டுறவுப் பரிசோதகர் முத்தையா, காலஞ்சென்ற இலிகிதர் சேயசுந்தரம், காலஞ்சென்ற சிவயோகம், படவரைஞர் செல்வரெத்தினம் ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-3-86 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, சாட்டி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

செ. பரஞ்சோதிநாதன்

[C 1304]

## செல்வன் க. கெங்காதரன்

தோற்றம்: 1964-01-03 மறைவு: 1986-03-13



நவாலி வடக்கைச் சேர்ந்த செல்வன் க. கெங்காதரன்(Holland) ஒல்லாந்தில் அகால மரணமானார். அன்னார் (கினிசத்தேன கெங்கா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) கந்தசாமி நாகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், சருணாகரன், கிரிதரன், கெங்காதேவி, துவாரகாதேவி, கிரிஜா, கேமலதா, சுதர்ஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும். சுப்பிரமணியம தங்கேஸ்வரி, கதிர்காமத்தம்பி புஸ்பவதி, செல்வராஜா, லலிதாதேவி, வேலாயுதம், கனகலிங்கம் சரோஜாதேவி, சிவயோகநாதன் மல்லிகாதேவி ஆகியோரின் மருமகனும், நடேசலிங்கம் விமலராணி, செல்வரத்தினம், சரோஜினிதேவி, பேரின்பநாதன் பராசக்தி ஆகியோரின் பெருமகனும் காலஞ்சென்ற குமாரசாமி சிவகாமிப்பிள்ளை க. சின்னத்துரை, காலஞ்சென்ற மு சின்னத்துரை சிவபாக்கியம் ஆகியோரின் பேரனுமாவார் ஈமக்கிரியைகள் புதன்கிழமை 19-3-86 பி. ப. 3-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஆயப்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக, எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

C-1303 தகவல்:- K. கதிர்காமத்தம்பி,